(5) அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்*"

எனக்கோருகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு பாசிஸ்ட் நோக்கம் கொண்ட ஒரு சட்டம். அதனால் இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதையும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதையும்-

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, எதிர்க்கிறோம் என்று சொல்லுங்கள். அதுபோதும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: நாங்கள் கடுமையாக ஆட்சேபிக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி.*

முற்பகல் 10-20

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த அத்தியாவசியப் பணி குறித்த போராட்டத்தைத் தடுப்பதற்கான சட்டம் என்பது மிகக் கொடூரமானதாக விளங்குவதற்கான வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கின்றேன்.

***டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீர் வழங்குதல் போன்ற அத்தியாவசியப் பணிகளுக்கு ஏற்புடையதாக இருந்தாலுங்கூட போக்குவரத்துக் கழக ஊழியர்கள், அரசு ஊழியர்கள், உள்ளாட்சித் துறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் அனைத்துத் தரப்பினருடைய உரிமையைப் பறிக்கின்ற சட்டமாக இது இருக்கின்ற காரணத்தினால் அறிமுக நிலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இதை எதிர்க்கின்றோம்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கின்றேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களாலே கொண்டு வரப்பட்ட 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் என்று சொல்லக்கூடிய பல்வேறு பணி நிலையிலே இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பினருக்கும் இது மிகப்பெரிய கெடுதலை, தொல்லைகளைக் கொடுக்கக்கூடிய சட்டமுன்வடிவு என்ற காரணத்தினாலே இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அறிமுக நிலையிலேயே கடுமையாக எதிர்க்கிறேன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எங்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தக் கட்சி?

திரு. ப. அரசன்: பி.ஜே.பி.-பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, மிகவும் நன்றி.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(6) மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்-*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 31-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *3-05-2002 அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு பதிலுரை. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நூற்றாண்டின் எழுச்சிமிகு தலைவியாக சோதனைகளை வென்று, புதிய சரித்திர சகாப்தம் படைத்திட்ட எங்கள் அன்னையே, அன்புத் தலைவியே, சமூக நீதி காத்த வீராங்கனையாக, காவிரி தந்த கலைச்செல்வியாக, தொட்டில் குழந்தைகள் திட்டம் தந்த கருணைத் தாயாக, மகளிர் காவல் நிலையங்கள் தந்த வீர மங்கையாக, ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் உழைக்கும் தொழிலாளர்களுக்கு எல்லாம் பெற்ற அன்னையாய், ஒளி விளக்காய் வழிகாட்டி வருகிறீர்கள்.*

கொள்கையில் பெரியாராய், கொற்றத்தில் புரட்சித் தலைவராய், அரியணையில் அமர்ந்து நல்லாட்சி நடத்தும் அம்மாவே, தங்களை, பொய் வழக்குகளில் சிக்க வைக்க, மத்தியிலே மண்டியிட்டு நாட்டைக் காட்டிக் கொடுத்த வர்க்கம், நாகூசாமல் பழிக்கிறது. சுயமரியாதைச் சுடராகிய தங்கள் முன் அவர்கள் அனைவரும் விட்டில் பூச்சிகளே! நீங்களோ வழக்குகளைச் சந்திப்பேன் என்று சங்கநாதம் செய்தீர்கள். ஆனால், அவர்களோ, ஊழல் வழக்குகளிலே சிக்கி சட்டத்திற்குப் பயந்து அனுதாபம் தேடி, அலறிப் புடைத்து, கபட நாடகத்தை அரங்கேற்றியதை இந்த நாடே நன்கு அறியும். சாய்ந்த வரலாற்றைத் தலைநிமிரச் செய்த உங்களைப் பார்த்து ஒய்ந்து போனவர்கள் ஒப்பாரியிட்டுப் புலம்புகிறார்கள்.

சாதாரணத் தொண்டனாக, விவசாயக் குடும்பத்தில் பிறந்து, கடைக்கோடியில் இருந்த என்னை ஒன்றியக் கழகச் செயலாளராக ஆக்கி, அதன்பின், 1996-ல் சட்டமன்ற உறுப்பினராக நிற்க வைத்து மிகக்குறைந்த வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பினை இழந்த நிலையிலும் மீண்டும்